**கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்கள் வடிவமைப்பு மற்றும் நிர்மாணச் செயற்திட்டம் - 2025**

---

கொஹுஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணச் செயங்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு கொஹுவல மற்றும் கண்டி மாவட்டத்தில் கட்டம்பே ஆகிய இடங்களில் அமைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மேம்பாலங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கொஹுவல மேம்பாலம் மற்றும் கட்டம்பே மேம்பாலம் ஆகிய 02 தளங்களின் கீழ் இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,932.65 மில்லியனிற்கு சமமான யூரோ 55.98 மில்லியனானதுடன் அதில் ரூபா 3,026.98 மில்லியனிற்கு சமமான யூரோ 55.98 மில்லியன் ஹங்கேரியன் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகை ரூபா 15,905.67 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2021 ஆகஸ்ட் 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 ஜுன் 16 இல் கொஹுவலயினையும் 2023 திசெம்பர் 16 இல் கட்டம்பவினையும் பூர்த்தி செய்ய பட்டியலிட்டிருந்தது, பின்னர், எம்ஓயு விற்கான ஓர் துணை உடன்படிக்கை மூலம் செயற்திட்ட பூர்த்தியாக்கல் காலம் 2025 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், 2026 பெப்ரவரி 10 அன்று மற்றொரு துணை ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தின்படி, பணிகள் மீண்டும் தொடங்கப்படும் திகதியில் இருந்து கொஹுவல திட்டத்தை நிறைவு செய்வதற்கான காலம் 3 மாதங்களாலும் கட்டம்பே திட்டத்தை நிறைவு செய்வதற்கான காலம் 22 மாதங்களாலும் நீட்டிக்கப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து செயற்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற காணப்படுகையில் கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் கணக்காய்வுடன் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 05 இன் பிரிவு 43(அ) இன் படி, சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு நிதிநிலமை கூற்றிற்குமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், நிதிநிலமை கூற்று தயாரிக்கப்பட்ட திகதியிலுள்ள இறுதியான அந்நிய செலாவணி வீதத்தில் மாற்றீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், செயற்திட்டம் அதற்கேற்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக, ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய கணக்கு மற்றும் நடைமுறை வேலைக்கணக்கு என்பன முறையே ரூபா 55.18 மில்லியன் மற்றும் ரூபா 862.61 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 917.79 | உடன்பட்டுள்ளோம். எனினும், இறுதியான செலாவணி வீதத்தில் செலுத்தப்பட வேண்டிய சென்மதிகள் மாற்றீடு செய்யப்படாததன் காரணமாக, ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய கணக்கு ரூபா 55.18 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், குறைத்துக் காட்டப்பட்ட இத்தொகையானது இவ்வருடத்தில் நாளேடு இலக்கம் 26-01 (Journal No. 26-01) மூலம் திருத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்நிய செலாவணி இலாபம்/நட்டத்தைக் கணக்கில் கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) அமைவாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 227.16 மில்லியன் ஆரம்பிப்பு முற்பண பிணைப் பொறுப்பு அறவீட்டுத் தொகை (Mobilization advance recovery guarantee amount) நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை. | 227.16 | உடன்பட்டுள்ளோம், இதுவரை மீட்கப்படாத ஆரம்பக் கொடுப்பனவானது பெறப்பட வேண்டிய நிகர சான்றளிக்கப்பட்ட தொகையான யூரோ 8,056,150.31 உடன் ஈடுசெய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய ஈடுசெயலின் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) அமைவாக நிதிநிலை அறிக்கைகளில் பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விளைவாக, மூல ஒப்பந்தத்தின் கீழ் மீட்கப்பட வேண்டிய ஆரம்பக் கொடுப்பனவுகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன. | |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இல 01/2019 இன் உப பிரிவு 9.3 | செயற்திட்டத்தின் வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும். இருப்பினும், மூன்று கூட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்தது. | உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் மற்றும் ”தித்வா” (Dithwa) சூறாவளி நிலைமை காரணமாக, 2025 ஆம் கணக்காய்வு ஆண்டில் வரையறுக்கப்பட்ட SCM கூட்டங்களை நடத்த முடியாமல் போயின. இருப்பினும், மீளாய்வாண்டில் மூன்று கூட்டங்களை நடத்த முடிந்தது. | சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிசெய்ய வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை. | உள்ளககணக்காய்வு மீளாய்வுக்குழு நிறுவப்பட வேண்டியதுடன் குறைந்தது 04 கூட்டங்கள் வருடாந்தம் நடாத்தப்படல் வேண்டும் இருப்பினும், மீளாய்வாண்டில், செயற்திட்ட முகாமைத்துவ அலகு மூன்று கூட்டங்களை மட்டுமே நடத்தியது. இவற்றில் இரண்டு கூட்டங்கள் செயலாளராலும், ஒரு கூட்டம் செயற்திட்ட பணிப்பாளராலும் தலைமை தாங்கப்பட்டன. | தொடர்புடைய சுற்றறிக்கை விதிமுறைகளுக்கு இணங்க, குறிப்பிடப்பட்ட இரண்டு கூட்டங்களையும் எதிர்காலத்தில் தவறாமல் நடத்துமாறு செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு (PMU) அறிவுறுத்துமாறு சுட்டிக்காட்டப்படுகிறது. | தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமைய உள்ளக கணக்காய்வுக் குழுவின் கூட்டங்கள் நடத்தப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிசெய்தல் வேண்டும். |
| (இ) | 2024 அக்டோபர் 24 ஆம் திகதிய டீஎம்ஏ/02/2024 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை 6 ஆம் | செயற்படுத்தும் முகவரகத்திற்காக நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர், தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (1) ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணங்கள் 133 | இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இருப்பினும், தகுதியான விண்ணப்பதாரர்கள் எவரும் விண்ணப்பிக்காததினால் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், பயனுள்ள மற்றும் சுதந்திரமான உள்ளக கணக்காய்வு செயல்முறையொன்று இருப்பதை |

| | | | |
|---|---|---|---|
| பிரிவு . | ஆகியவற்றிற்கு இணங்க திட்டத் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரை இச்செயற்திட்டத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நேர்முகப்பரீட்சை மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்த வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 நிதிகளைப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2025 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, கொஹவல மற்றும் கட்டம்பே மேம்பாலத் திட்டத்திற்காக வாக்கு இலக்கம் 117-2-6-26-2104(12) (ரூபா 8,000 மில்லியன்), 117-2-6-26-2104(17) (ரூபா 2,800 மில்லியன்), மற்றும் 117-2-6-26-2105(11) (ரூபா 100 மில்லியன்) மொத்தம் ரூபா 10,900 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. ஹங்கேரிய எக்சிம் வங்கி (Hungarian EXIM Bank) 2025 பெப்ரவரியில் வெளிநாட்டு கடன்களை வழங்குவதை நிறுத்துவதாக அறிவித்த போதிலும், மீளாய்வாண்டில் இறுதி காலாண்டில் ஆரம்ப வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில் 98 சதவீதம் திருத்தப்பட்டு ரூபா 185 மில்லியனாகக் குறைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 175.24 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், ரூபா 9.76 மில்லியன் மீதித் தொகை திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, கணக்காய்வின் போது இச்செயற்திட்டம் நிதியை வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை | உடன்பட்டுள்ளோம் | ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதையும், திட்டத்தின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதையும் உறுதிசெய்வதற்காக, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரி மற்றும் உரிய அதிகார சபைகளுடன் ஒருங்கிணைதல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் 2017 ஜுலை 27 அன்று விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, இலங்கையில் மேம்பாலங்களைக் அமைப்பதற்காகச் சலுகைக் கடன் வசதியை வழங்க ஹங்கேரி அரசாங்கம் தனது உடன்பாட்டை உறுதிப்படுத்தியது. இதற்கமைய, கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலத் திட்டங்களை வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் செய்வதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் ஹங்கேரிய ஏற்றுமதி-இறக்குமதி வங்கிப் பிணைக்கப்பட்ட நிறுவனத்திற்கும் (EXIM) இடையே 2021 ஏப்ரல் 08 அன்று நிதியளிப்பு ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டது.<br><br>அதனைத் தொடர்ந்து, கொஹுவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களை வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் செய்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் M/s Betonutepito தனியார் நிறுவனத்திற்கும் இடையே 2019 ஜுன் 20 அன்று ஒப்பந்தம் கையெழுத்தானது. இதற்கமைய, 2021 ஆகஸ்ட் 16 அன்று நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்டு, கொஹுவல மேம்பாலம் 2024 பெப்ரவரி 15 அன்றும், கெடம்பே மேம்பாலம் 2023 ஜுன் 10 அன்றும் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.<br><br>இருப்பினும், 2022 ஏப்ரல் 12 அன்று இலங்கை அரசாங்கத்தினால் தற்காலிகமாக வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவது இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக, 2022 ஏப்ரல் 14 அன்று ஹங்கேரிய எக்சிம் வங்கி அனைத்து நிதி வழங்கல்களையும் இடைநிறுத்தியது. இதன் விளைவாக, 2023 மே 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்தத்தை பரஸ்பரம் இடைநிறுத்துவதற்கு முதலாளிக்கும் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ஒப்பந்தக்காரருக்கும் | உடன்பட்டுள்ளோம். | நிதித் தடங்கல்கள் ஏற்படும் போது நேரத்தோடு முடிவுகளை எடுப்பதை உறுதிசெய்யும் வகையில், திட்டத்தைக் கண்காணிக்கும் மற்றும் ஒருங்கிணைக்கும் வழிமுறைகளைப் பிரதம கணக்கீட்டு அதிகாரி உறுதிசெய்ய வேண்டும். மேலும் செலவுகள் அதிகரிப்பதையும் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் குறைப்பதற்காக, இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கும் விரைந்து முடிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

(M/s Betonutepito P/C) இடையே 2023 அக்டோபர் 25 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த இடைநிறுத்தம் பின்னரான உடன்பாட்டின் மூலம் 2025 ஜூன் 30 வரை நீடிக்கப்பட்டது.

கடன் வசதியின் கீழ் மீண்டும் நிதியை வழங்கத் தொடங்க முடியாது என்று ஹங்கேரிய எக்சிம் வங்கி 2025 பெப்ரவரி 14 அன்று நிதி அமைச்சுக்கு அறிவித்தது. 2026 ஜனவரி 20 திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானம் இலக்கம் 26/0052/809/009 இன் படி, இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஒப்பந்தத்தை மீண்டும் தொடங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதற்கமைய, நிர்மாணப் பணிகளை மீண்டும் தொடங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் குறித்த ஒப்பந்தக்காரருக்கும் இடையே 2026 பெப்ரவரி 10 அன்று மேலதிக ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. திருத்தப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி 55,986,900 யூரோக்களாக இருந்ததுடன், ஒப்பந்தக்காரரின் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்காக 3,986,900 யூரோக்கள் மேலதிக செலவாக ஏற்பட்டது. இதனால், மூல ஒப்பந்தத்துடன் ஒப்பிடுகையில் மொத்த ஒப்பந்தப் பெறுமதி 7.67 சதவீதம் அதிகரித்தது.

(ஆ) 2019 ஜூன் 20 திகதியிட்ட கொஃஹவல மற்றும் கெடம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் சிறப்பு நிபந்தனைகள் 1.1.3.3 இன் படி, திட்டம் மீண்டும் தொடங்கப்படும் திகதியிலிருந்து கொஃஹவல மேம்பாலத்தின் எஞ்சிய பணிகள் 03 மாதங்களுக்குள்ளும், கட்டம்பே மேம்பாலத்தின் பணிகள் 22 மாதங்களுக்குள்ளும் நிறைவு செய்யப்பட வேண்டும்.

2026 பெப்ரவரி 10 திகதியிட்ட மேலதிக ஒப்பந்தத்தின் நிபந்தனை 10

திருத்தப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இலங்கை ரூபாயிலான கொடுப்பனவுகளில் 75 சதவீதம் ஏற்கனவே ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், எஞ்சிய 25 சதவீத கொடுப்பனவை அமெரிக்க டாலரில் (USD) தந்திப் பரிமாற்றம் (Telegraphic Transfer - TT) மூலம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்த போது,

மோசமான செயற்திட்ட முகாமைத்துவம் (project management) குறித்து பிரதம பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் விசாரணையை நடத்துவதோடு, இப்பிரச்சினைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | இன் படி, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே மீண்டும் தொடங்கும் திகதி தீர்மானிக்கப்பட வேண்டும்:<br><br>i. மேலதிக ஒப்பந்தம் அமுலுக்கு வந்து 28 நாட்களின் பின்னர்<br>ii. மேலதிக ஒப்பந்தத்தின் நிபந்தனை 06 இன் கீழ் கொடுப்பனவுகளைச் செலுத்தித் தீர்த்தல்<br>iii. ஒப்பந்தக்காரர்கள் ஏற்றுக்கொண்ட கடிதத்தை (Letter of Acceptance) வழங்கி 28 நாட்களின் பின்னர்<br>iv. ஒப்பந்தக்காரருக்கு முன்பணக் கொடுப்பனவுகளை வழங்குதல்<br><br>இருப்பினும், 2026 மார்ச் 27 வரை மேலே குறிப்பிடப்பட்ட (ii) மற்றும் (iv) நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததால், மீண்டும் தொடங்கும் திகதி தீர்மானிக்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், 2026 ஜனவரி 19 திகதியிட்ட 26/0052/809//009 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, அமைச்சரவை நினைவுக் குறிப்பு 3.1, 3.2 மற்றும் 3.3 ஆகியவற்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த போதிலும், மேலதிக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேலே உள்ள பத்தி (ii) இன் நிபந்தனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கவில்லை. | அக்கொடுப்பனவை ஒப்பந்தக்காரரின் லாபமாகக் கருதி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) 14 சதவீத பணப்பரிமாற்ற வரியை (remittance tax) விதித்தது. இந்த நிலைப்பாட்டை ஒப்பந்தக்காரர் எதிர்த்துள்ளதோடு, பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் இடையே தற்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.<br><br>இருப்பினும், ஒப்பந்தக்காரர் 2026 பெப்ரவரி 06 அன்று ஏற்கனவே பணிகளைத் தொடங்கியுள்ளார்.<br><br>மேலும், அமைச்சரவை ஒப்புதலின் உருப்படி 3.4 இன் படி, திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டதும் மேலதிக ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட வேண்டும். இதற்கமைய, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு தேவைகளில் ஒன்றாக நிபந்தனை (ii) ஐயும் உள்ளடக்கி மேலதிக ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கட்டம்பே மேம்பாலம் நிர்மாணிக்கப்படுவதன் காரணமாக கட்டம்பே சந்தியில் அமைந்திருந்த ரணவிரு (போர்வீரர்) நினைவிடம் அகற்றப்பட வேண்டியிருந்தது. பழைய நினைவிடத்திற்குப் பதிலாகப் புதிய ரணவிரு நினைவிட மொன்றைக் கட்டுவதற்கு இத்திட்டத்தில் முன்மொழியப்பட்டது. இதற்காகத் திட்டத்தின் நகர திட்டமிடலாளரால் (urban planner) கருத்தாக்க வடிவமைப்பு (conceptual design) சமர்ப்பிக்கப்பட்டதோடு, அதற்குரிய ஒப்புதல் 2022 ஆகஸ்ட் 18 அன்று | ரணவிரு' (போர்வீரர்) நினைவிடம் தொடர்பான விஷயம் ஒப்பந்தக்காரருடன் விவாதிக்கப்பட்டதுடன், முன்மொழியப்பட்ட பணிக்கான மதிப்பீடு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் உடன்படப்பட்டது. இந்த நடவடிக்கை ஒப்பந்தத்தின் நகர நிலப்பரப்பமைப்பு (urban landscaping) பணிகளின் கீழ் அமல்படுத்தப்படும். | சமூக முக்கியத்துவம் வாய்ந்த இக்கட்டுமானத் திட்டத்தின் தாமதத்தால் ஏற்படும் சமூகத் தாக்கத்தைக் குறைப்பதற்குப் பிரதம கணக்கீட்டு அதிகாரியும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவும் (Project Management Unit) தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தலைமையகத்தின் II ஆம் படைப்பிரிவு தளபதியால் வழங்கப்பட்டது.<br><br>2026 பெப்ரவரி 10 திகதியிட்ட மேலதிக ஒப்பந்தத்தின்படி கட்டம்பே மேம்பாலத்தின் புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்ட போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2026 மார்ச் 27 வரை, ரணவிரு நினைவிடத்தின் வேலைத் திட்டம் மற்றும் செலவு மதிப்பீட்டை ஒப்பந்தக்காரர் வாடிக்கையாளருக்குச் (client) சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், ரணவிரு நினைவிடத்தைக் கட்டுவதற்காக ஷரூபா 12.44 மில்லியன் தொகையிலான மதிப்பீடு ஒன்று II ஆம் படைப்பிரிவு தலைமையகத்தின் திட்ட அதிகாரியினால் 2022 ஏப்ரல் 26 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கட்டம்பே மேம்பாலக் கட்டுமானத்திற்காக, ரணவிரு சிறுவர் பூங்கா அமைந்துள்ள நிலப்பரப்பிலிருந்து 89 பேர்ச்ஸ் காணியும், வாகன நிறுத்துமிடத்துடன் கூடிய 04 கட்டிடங்களும் அகற்றப்பட வேண்டியிருந்தது. இதற்காக, நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சினால் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு ரூபா 14.16 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஒதுக்கீடு உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாததால், அது மீண்டும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. செயற்திட்டப் பணிப்பாளரின் RDA/MFAP/HUN/FO/GAT/LAO இலக்கத்தைக் கொண்ட 2025 பெப்ரவரி 21 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, மேம்பாலத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளுக்கு ரணவிரு பூங்கா காணி மிகவும் முக்கியமானதொரு நிலப்பரப்பாகும் என்றும், பாலக் கட்டுமானத்திற்காக இக்காணியை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால், ஒப்பந்தக்காரருக்கு மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூபா 16.5 மில்லியன் மேலதிகத் தொகையாக செலுத்த வேண்டி வரும் என்றும் விடயதான அமைச்சின் செயலாளர் | இலங்கை ராணுவத்தின் II வது படைப்பிரிவின் தளபதிக்கு ரூபா . 14.16 மில்லியனை ஒதுக்குவது தொடர்பாக முறையான கோரிக்கை மனுவைச் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி, அந்த மனு பெறப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து இதற்கான நிதியை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரும் திட்டப் பணிப்பாளரும் குறித்த நேரத்தில் பணித்தளத்தின் உரிமையை ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைப்பதை உறுதிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்டிருந்தார்.<br><br>இருப்பினும், நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்படவில்லை என்பதுடன், இராணுவத் தலைமையகத்தினால் 2026 மார்ச் 27 வரை கட்டிடம் கட்டப்படவில்லை. மேலும், சிறுவர் பூங்காவின் நடுவில் உள்ள கால்வாயின் இருபுறமும் அமைந்துள்ள கட்டிடங்களும் இராணுவத்தினரால் அகற்றப்படவில்லை. அதற்கமைய, ஒப்பந்தத் தேவைகளின்படி திட்டப் பகுதி சரியான நேரத்திலும் முழுமையாகவும் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | கொஹுவல மேம்பாலத்தை வடிவமைப்பு செய்தல் மற்றும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை பரஸ்பரம் இடைநிறுத்துவதற்காக, 2023 ஒக்டோபர் 25 அன்று இரு தரப்பினராலும் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MOU) செயல்படுத்துவதற்கு பணியமர்த்துபவர் (Employer) மற்றும் ஒப்பந்தக்காரரினால் கையெழுத்திடப்பட்ட மேலதிக ஒப்பந்தங்களின்படி, கொஹுவல மேம்பாலத்தின் தளத்திற்கு (Deck) கொன்கிரீட் இடுதல் மற்றும் செயற்திட்டப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பேணுதல் ஆகியவற்றை நிறைவு செய்ய ஒப்பந்தக்காரர் ஒப்புக்கொண்டிருந்தார். இருப்பினும், எஞ்சிய பணிகளை முடிக்காமல் 2024 ஜுலை 17 அன்று கொஹுவல மேம்பாலத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறப்பதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) நடவடிக்கை எடுத்திருந்தது. எனவே, இது வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையக்கூடும். | ஒப்பந்தக்காரர் வடிகால் அமைப்பு கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான ஆரம்பக்கட்ட எல்லைக் குறிப்பீட்டுப் (setting-out) பணிகளைத் தொடங்கியுள்ளார் மேலும், பணி ஆரம்பிக்கும் திகதி இறுதி செய்யப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. | பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான பணிகள் முழுமையடையாமல் இருக்கும் போது, எந்தவொரு பொது உள்கட்டமைப்பையும் திறப்பதற்கு முன்னதாக, அபாய மதிப்பீடு (risk assessment) மற்றும் நடைமுறைகளுக்கான தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளைத் (standard protocols) தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு தலைமை கணக்கீட்டு அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பெறுகை வழிகாட்டலின் 8.9.3 ஆம் பந்தியின்படி, ரூபா 500 மில்லியனுக்கும் அதிகமான எந்தவொரு பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான ஒப்பந்த உடன்படிக்கையிலும் அமைச்சுச் செயலாளரே கையொப்பமிட வேண்டும். இருப்பினும், ரூபா 10,192 | நெடுஞ்சாலைகள் அமைச்சின் சார்பில், வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரால் வீதி நிர்மாண | தலைவர் தனது அதிகார வரம்பை மீறிச் செயல்பட்ட சூழ்நிலைகளைக் கண்டறிவதற்காக முறைசார்ந்த விசாரணை நடத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான கொஃஹவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான ஒப்பந்த உடன்படிக்கையில், தகுந்த அனுமதியின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரால் 2019 ஜூன் 20 அன்று கையொப்பமிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 17,968 மில்லியன் பெறுமதியான கொஃஹவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான மேலதிக ஒப்பந்த உடன்படிக்கையிலும் 2026 பெப்ரவரி 10 அன்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரே கையொப்பமிட்டிருந்தார். | ஒப்பந்தங்களில் கையொப்பமிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 2025 ஆம் ஆண்டில் கொள்முதல் வழிகாட்டலின் 5.25 ஆம் பிரிவின்படி, அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு) இடமளிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | கட்டம்பே மேம்பாலத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட மொத்தம் 152 காணித் துண்டுகளில் 07 காணித் துண்டுகளுக்காக ரூபா 29.13 மில்லியன் இழப்பீடு மற்றும் வட்டியையும், கொஃஹவல மேம்பாலத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட மொத்தம் 167 காணித் துண்டுகளில் 108 காணித் துண்டுகளுக்காக ரூபா 1,140.27 மில்லியனையும் செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) செலுத்தி முடித்துள்ளது. இருப்பினும், காணி கையகப்படுத்தும் முன்னேற்றம் கட்டம்பேயில் 5 சதவீதமாகவும் கொஃஹவலவில் 65 சதவீதமாகவும் மட்டுமே உள்ளது. எனவே, இரண்டு மேம்பாலங்களுக்குமான காணி கையகப்படுத்தும் நடவடிக்கை மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | காணி கையகப்படுத்தும் (LAQ) செயல்பாட்டில் ஏற்பட்ட தாமதத்திற்கு, திட்டம் மீண்டும் தொடங்கப்படுவது குறித்த நிச்சயமற்ற தன்மையே பிரதான காரணமாகும். இருப்பினும், கண்டி பிரதேச செயலாளருடன், அளவை, மதிப்பீடு, விவசாய சேவைகள் திணைக்களங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்காளர்களின் பங்கேற்புடன் பல காணி கையகப்படுத்தல் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | காணி கையகப்படுத்தும் நடைமுறையின் அனைத்துக் கட்டங்களுக்கும் தேவையான ஆவணங்களுடன் கூடிய உள்ளகக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை ஸ்தாபிப்பதற்கும், அந்நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கொஃஹவல மேம்பாலத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட 107 காணித் துண்டுகளுக்கான இழப்பீட்டுப் பணத்தை செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) செலுத்தி முடித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் முடிவு வரை காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரமான சான்றிதழை PMU பெறவில்லை. | தொடர்புடைய பிரதேச செயலகங்கள் (DSs) நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு அமைவாக 44 ஆம் பிரிவின் நடவடிக் கைகளை சுயாதீனமாகவே மேற்கொள்கின்றன் மேலும், இவ்வாறான நடைமுறை களில் தலையிடுவதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு (PMU) வரம்பிற்குட்பட்ட அதிகாரமே உள்ளது. | காணி கையகப்படுத்தும் நடைமுறையின் அனைத்துக் கட்டங் களுக்கும் தேவையான ஆவணங்களுடன் கூடிய உள்ளகக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை ஸ்தாபிப்பதற்கும், அந்நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஐ) நிதிப் பிரமாணக் குறிப்பு 135 இன் பிரகாரம், காணி கையகப்படுத்துதலுக்கான இழப்பீடு, சட்டப்பூர்வக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிச் செலுப்பனவுகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக காணி கையகப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்புச் குழு (LARC) மற்றும் விசேட காணி கையகப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்புச் குழு (SLARC) என்பன நியமிக்கப்பட்டிருந்தன. 2014 மே 30 ஆம் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1864/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 3 (1) ஆம் கட்டளையின்படி, குறிப்பிட்ட திட்டத்திற்காக கையகப்படுத்தப்படும் எந்தவொரு காணியினதும் சந்தைப் பெறுமதி மற்றும் காணி கையகப்படுத்துதலால் ஏற்படும் தீய விளைவுகளுக்காக வழங்கப்படும் இழப்பீடு என்பன, அக்காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவிற்காக நியமிக்கப்பட்ட காணி கையகப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்புச் குழுவினால் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். இருப்பினும், கொஃஹவல மற்றும் கட்டம்பே மேம்பாலங்களுக்காகக் கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கு, நிதிப் பிரமாணக் குறிப்பு 136 மற்றும் 1864/54 ஆம் இலக்க வர்த்தமானி ஆகியவற்றின் பிரகாரம் காணி கையகப்படுத்துதல் மற்றும் பதிலீட்டுக் குழுவின் (LARC) மதிப்பீட்டைப் பெறாமல், காணி கையகப்படுத்தும் அலுவலரால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் ரூபா 39.48 மில்லியன் இழப்பீடும் ரூபா 57.64 மில்லியன் வட்டியும் செலுத்தப்பட்டிருந்தன.

2014 மே 30 ஆம் திகதியிடப்பட்ட 1864/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, காணி கையகப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்புச் குழுவின் (LARC) கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 18 திட்டங்கள் தொடர்பான காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், ஹொரண - பமன்கடை வீதித் திட்டமும் அத்திட்டங்களில் ஒன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது. முன்மொழியப்பட்ட கொஃஹவல மேம்பாலம் குறித்த வீதிப்பாதையினுள்ளேயே அமைந்துள்ளதால், மேம்பால நிர்மாணத்திற்காக மேலதிக காணிகளைக் கைய கப்படுத்துவது அவசிய மானது. அதற்கமைய, சீரான தன்மையைப் பேணுவ தற்கும் நடைமுறை வேறுபா டுகளைத் தவிர்ப்பதற்குமாக, மேம் பாலம் தொடர்பான காணி கையகப்படுத்தும் நடவடிக் கைகளும் LARC இன் கீழேயே மேற்கொள்ளப் பட்டன. இருப்பினும், 2009 மார்ச் 17 ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் 2009 ஏப்ரல் 07 ஆம் திகதியிடப்பட்ட 1596/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக வே மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கமைய, கட்டம்பே மேம்பாலம் தொடர்பான காணி கையக ப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்த வர்த்தமானி அறிவித் தலின் விதிகளுக்கு அமையவே நடைமுறைப்படு த்தப்பட்டு வருகின்றன மேலும் இழப்பீட்டுக் கொடுப் பனவுகளும் அதற்கமையவே வழங்கப்படும்.

இவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர், நிதிப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் தொடர்புடைய வர்த்தமானி விதிகளைப் பின்பற்றுவதை தலைமை கணக்கீட்டு அலுவலரும் செயற்திட்ட முகாமைத்துவ அலகும் உறுதிசெய்ய வேண்டும்.